தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 122/பேரூ/2021

நாள் 07.04.2022

திரு. V. ராதா,
தலைஞாயிறு, நாகப்பட்டினம் மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
தலைஞாயிறு பேரூராட்சி,
நாகப்பட்டினம் மாவட்டம் ... எதிர்மனுதாரர்

நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், சந்தானம் தெரு, தலைஞாயிறு என்ற முகவரியைச் சேர்ந்த திரு.V.ராதா என்பவரின் 10.08.2021 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 16.08.2021ல் பெறப்பட்டு, 122/2021என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், சந்தானம் தெரு, தலைஞாயிறு என்ற முகவரியைச் சேர்ந்த திரு. V.ராதா என்பவர் அளித்துள்ள புகார் மனுவில் 2018ஆம் ஆண்டு ஏற்பட்ட கஜா புயலில் நாகப்பட்டினம் மாவட்டம், தலைஞாயிறு பேரூராட்சிக்கு மக்கள் பேரிடர் பணிக்காக பேரூராட்சி நிதியிலிருந்து பெரும் தொகையை செலவிட்ட பிறகு, மீண்டும் அரசிடமிருந்து பணம் பெறுவதற்கு மோசடியாக 15 வார்டுகளிலும் உணவு மற்றும் இதர பணிகள் செய்ததாக பொய் ஆவணம் தயாரித்து ரூ.87 லட்சத்தை (ரூபாய் எண்பத்தேழு லட்சம் மட்டும்) அப்போதைய செயல் அலுவலர் அவருடைய வங்கிக் கணக்கில் வரவு செய்து வருவாய்த் துறையிடமிருந்து முறைகேடாக பெற்ற செய்தி பல்வேறு ஊடகங்கள் மூலம் தெரியவந்து, பொது மக்கள் அதிர்ச்சியுற்றும் பல்வேறு அரசியல்

கட்சிகளும் முறைகேடு செய்தது தொடர்பாக முறையிட்டும், எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை என்று குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் முறையிட்டும் எந்த விசாரணையும் மேற்கொள்ளவில்லை. காரணம் அன்றைய ஆளும் கட்சியும் தலைஞாயிறு பேரூராட்சி நிர்வாகமும் சமரசம் செய்துகொண்டு மேற்கண்ட 87 லட்சம் அரசு பணத்தை முறைகேடு செய்திருக்கிறார்கள். எனவே, இது தொடர்பாக விசாரணை மேற்கொண்டு சம்மந்தப்பட்ட நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க ஆணைபிறப்பிக்குமாறு கோரி இம்முறைமன்ற நடுவத்தில் புகார் அளித்துள்ளார்.

2. தலைஞாயிறு பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர் ஆகியோர் 28.12.2021 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவ 13.12.2021 நாளிட்ட அழைப்பாணைகள் ஒப்புகையுடன் கூடிய பதிவு அஞ்சல் மூலமாக அனுப்பப்பட்டன. மனுதாரர் திரு. V. ராதா 28.12.2021 அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகவில்லை. தலைஞாயிறு பேரூராட்சி செயல் அலுவலர் தனது 27.12.2021 நாளிட்ட கடிதத்தில் விசாரணை நாளன்று மாலை நமக்கு நாமே திட்டம் (நகர்புறம்) தொடர்பான மெகா ஆய்வுக் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டியதாலும், தலைஞாயிறு பேரூராட்சியில் இரண்டாம் நிலை அலுவலரான இளநிலை உதவியாளர் திரு. எஸ்.ஆர். குமார் அவர்களை நேரடி விசாரணையில் ஆஜராகி விளக்கமளிக்க அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

3. மனுதாரரின் புகார் குறித்து தலைஞாயிறு பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள 27.12.2021 நாளிட்ட விளக்க அறிக்கையில் முறையீட்டு மனுதாரர் புகார் மனுவில் அப்போதைய செயல் அலுவலர் என குறிப்பிட்டுள்ள திரு. ஏ. ரஞ்சித் என்பவர் 28.7.2017 முதல் 20.01.2020 முடிய தலைஞாயிறு பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்து தற்போது மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் தேர்வுநிலை பேரூராட்சியின் செயல் அலுவலராக பணிபுரிந்து வருகிறார் என்றும், மனுதாரரின் 7.7.2021 நாளிட்ட புகார் மனு பேரூராட்சிகளின் ஆணையாளர், நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் மற்றும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தஞ்சாவூர் ஆகியோரால் பெறப்பட்டதன் அடிப்படையில், தஞ்சாவூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரால் துறைவழி விசாரணை மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறதென்றும் தெரிவித்துள்ளார்.

4. நாகப்பட்டினம் மாவட்டம், தலைஞாயிறு பேரூராட்சி 49.05 சதுர கி.மீ பரப்பளவு கொண்ட பெரிய பேரூராட்சி என்றும், பேரூராட்சியின் மொத்த மக்கள் தொகை 12798 என்றும், இதில் 60 சதவிகித மக்கள் கூரை வீடு/குடிசை வீடுகளில் வசிக்கும் பொருளாதாரத்தில் மிகவும் நலிந்த பிரிவினர் என்றும் தெரிவித்துள்ளார். 2018 கஜா புயலின்போது தலைஞாயிறு பேரூராட்சி கடுமையாக பாதிக்கப்பட்டு, மாண்புமிகு உள்ளாட்சி அமைச்சர், பேரூராட்சிகளின் இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சியர் ஆகியோரால் பார்வையிடப்பட்டு பல்வேறு நிவாரண பணிகள் போர்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன என்றும், கஜா புயல் காரணமாக பாதிக்கப்பட்ட பொதுமக்களை பாதுகாக்க 16.11.2018 முதல் 15.12.2018 முடிய பல்வேறு மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள்

அப்போதைய செயல் அலுவலரால் மேற்கொள்ளப்பட்டன என்றும் தெரிவித்துள்ளார். பேரிடர் நிவாரண நிதியை எதிர்நோக்கி கட்டணம் அடிப்படையில் சேவை வழங்கும் நிறுவனங்கள்/நபர்கள் மூலம் பின்வரும் முக்கிய செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டன என்றும் தெரிவித்துள்ளார்-

1. தேசிய பேரிடர் மீட்பு பணியினர் முகாம்
2. பொது மக்களுக்கு நிவாரண முகாம்
3. படகு அமர்த்திய செலவினம்
4. பிற மாவட்ட மீட்புப் பணியாளர்கள் முகாம் செலவினம்
5. ஜெனரேட்டர் செலவினம்
6. உணவு சமைக்கும் செலவினம்
7. விழுந்த மரங்களை அகற்றிய செலவினம்
8. வாகனங்கள் செலவினம்

5. முன்னாள் செயல் அலுவலர் திரு. ஏ. ரஞ்சித் அவர்களது வங்கிக் கணக்கில் நிதி வரவு வைக்கப்பட்டது தொடர்பாக தனியரிடம் பெறப்பட்ட விளக்கக் கடிதத்தில் கஜா புயல் 2018 தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட செலவினங்களுக்கு 2019ஆம் ஆண்டு வரை நிதி வரப்பெறாத நிலையில் 20.01.2020 அன்று செயல் அலுவலர் பணியிட மாறுதலின்போது சேவை வழங்கியவர்கள் செலவினத் தொகை கேட்டு நெருக்கடி அளித்ததால், செயல் அலுவலர் சொந்த ஏற்பாட்டில் கடன் பெற்று சேவை வழங்கியோர்களில் சிலருக்கு பகுதியாகவும், சிலருக்கு முழுமையாகவும் தொகை வழங்கியிருந்ததாக தெரிவித்துள்ளார் என்று குறிப்பிட்டுள்ளார். செயல் அலுவலரால் மேற்கொள்ளப்பட்ட செலவின தொகை செலவினப் பட்டியல் கோரிக்கை அடிப்படையில் பின்னர் வருவாய் துறையினர் மூலம் மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து பணி மாறுதலில் சென்ற செயல் அலுவலர் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டதாகவும், அதற்கான சான்றிதழ் வருவாய்த் துறையினரிடம் பெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளார் என்றும், இது குறித்து வேதாரண்யம் வட்டாட்சியர் அளித்துள்ள 27.6.2020 நாளிட்ட சான்றில், கஜா புயலினால் பாதிக்கப்பட்டு முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்த மக்களுக்கு உணவு சமைத்து வழங்கப்பட்டமைக்கான நிலுவைத் தொகை ரூ.31,03,562/– தலைஞாயிறு பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்து தற்போது தரங்கம்பாடி பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரியும் திரு. ஏ. ரஞ்சித் என்பவரின் இந்தியன் வங்கி (தரங்கம்பாடி கிளை) சேமிப்புக் கணக்கு எண்.6868123193ல் வரவு வைக்கப்பட்டுள்ளதாக சான்றளித்துள்ளார். இப்புகார் குறித்து தலைஞாயிறு பேரூராட்சியின் முன்னாள் செயல் அலுவலர் திரு. ஏ. ரஞ்சித் (தற்போது மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர்) தலைஞாயிறு முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலருக்கு அனுப்பியுள்ள கடிதம் ந.க.எண்.500/2021/அ1 நாள் 21.12.2021ன் நகல் இம்முறைமன்ற நடுவத்திற்கு தலைஞாயிறு முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரது விளக்க அறிக்கையுடன் இணைத்தனுப்பப்பட்டுள்ளது.

6. மனுதாரரது புகார் குறித்து தஞ்சாவூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு நடைபெற்றுவருவதாக தலைஞாயிறு முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரது விளக்க அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதன்

அடிப்படையில், மேற்படி விசாரணை அறிக்கையின் நகல் ஒன்றினை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பிவைக்குமாறு தஞ்சாவூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டார். அவரது அறிக்கை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பப்படாததால், 29.3.2022 அன்று மேற்கண்ட புகார் மனு மீதான விசாரணையை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு, மனுதாரர் மற்றும் தலைஞாயிறு பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோருக்கு 16.3.2022 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

7. இம்முறையும் மனுதாரர் திரு. V. ராதா இம்முறைமன்ற நடுவ நேரடி விசாரணைக்கு ஆஜராகவில்லை. தலைஞாயிறு பேரூராட்சி செயல் அலுவலர் திரு. சி. சரவணன் இம்முறைமன்ற நடுவ விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தமது வாக்குமூலத்தில் "கடந்த 24.3.2022 முதல் தலைஞாயிறு பேரூராட்சியின் செயல் அலுவலர் (முழு கூடுதல் பொறுப்பு) வகித்துவருகிறேன். நாகப்பட்டினம் மாவட்டம், தலைஞாயிறு பேரூராட்சியின் 18 வார்டுகளில் உணவு மற்றும் இதர பணிகள் செய்தது தொடர்பாக பொய் ஆவணம் தயாரித்து 87 லட்சம் ரூபாய் அப்போதைய செயல் அலுவலர் தன் வங்கிக் கணக்கில் வரவு செய்துகொண்டதாக, வரப்பெற்ற புகார் குறித்து உதவி இயக்குநர், தஞ்சாவூர் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட 13.12.2021 நாளிட்ட விசாரணை அறிக்கையினை அனுப்பிடுமாறு உதவி இயக்குநர், தஞ்சாவூர் அவர்கள் பேரூராட்சியின் 6.1.2022 நாளிட்ட கடிதம் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டார். ஆனால், மேற்கண்ட விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருவதால், அவரிடமிருந்து விசாரணை அறிக்கையின் நகல் பெறப்படவில்லை என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

8. தலைஞாயிறு பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள 28.3.2022 நாளிட்ட கூடுதல் விளக்க அறிக்கையில் காவேரி கடைமடை பகுதியான தலைஞாயிறு பேரூராட்சி 49.05 ச.கி.மீ பரப்பளவு கொண்ட 7 வருவாய் கிராமங்களை உள்ளடக்கிய ஊரக பேரூராட்சி பகுதியாகும். வடகிழக்கு பருவமழை காலங்களில் பெரும் வெள்ளம் சூழ்ந்து மக்கள் வீடுகள், உடமைகளை விட்டுவிட்டு முகாம்களில் தங்கும் நிலையில், அவர்களுக்கு உணவு, குடிநீர், மின்வசதி, பொது சுகாதாரம் உள்ளிட்ட வசதிகளை ஏற்படுத்தித் தரும் பணிகளை வருவாய்த் துறை மூலம் கொள்ளப்படுவதால், 7 கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் வருவாய் ஆய்வாளர் ஆகியோரை ஒருங்கிணைத்து பேரிடர் கால பணிகளை துரிதமாக மேற்கொள்ள தலைஞாயிறு பேரூராட்சி செயல் அலுவலரை மண்டல அலுவலராக (Zonal Officer) நியமனம் செய்து அத்தியாவசியமான பொருட்களை அவர் தனது சொந்த பொறுப்பில் கொள்முதல் செய்து நிவாரண பணிகளை மேற்கொள்வது நடைமுறையாகுமென்றும், இதே நடைமுறை ஒவ்வொரு வடகிழக்கு பருவமழை பேரிடர் காலங்களிலும் தொடர்ந்து 20 ஆண்டுகளாக செய்யப்பட்டுள்ளது. நிவாரண பணிகளை விரைந்து மேற்கொள்ள வேதாரண்யம் வட்டாட்சியர் காசாக முன்பணம் வழங்குவார். அத்தொகைக்கு அவ்வப்போது செயல் அலுவலர் ஒப்புதல் வழங்குவார். இறுதியாக மொத்த தொகைக்கும் சமர்ப்பிக்கப்படும் பட்டியல் தொகையினை வட்டாட்சியர் முன்பணத் தொகையினை காசாகவே கழித்துக்கொண்டு மீதித் தொகையினையும் காசாகவே விடுவிப்பார். இந்நிகழ்வில் இறுதித் தொகை விடுவிக்கப்பட்ட நாளில் அப்போதைய செயல் அலுவலர் திரு. ஏ. ரஞ்சித் தலைஞாயிறு முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர்

பொறுப்பிலிருந்து தரங்கம்பாடி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலராக பதவி உயர்வு பெற்று சென்றதால், அவரது தனி வங்கிக் கணக்கின் வழி தொகை விடுவிக்கப்பட்டது என்று தெரிவித்துள்ளார். மேலும் இச்செலவுகள் அனைத்தும் வட்டாட்சியர் அவர்களின் நேரடி பார்வையில்/பொறுப்பில் மேற்கொள்ளப்படுவதால், பேரூராட்சி பொதுநிதிக் கணக்கில் இத்தொகை வரவெடுக்கப்படுவதில்லை.

வடகிழக்கு பருவமழை காலங்களில் மேற்கண்டவாறு பணிகள் மேற்கொள்ளப்பட்டுவந்த நிலையில், மிகப்பெரிய பேரிடர் கஜா புயலால் சேதம் ஏற்பட்ட நிலையில் அவசர அவசியம் கருதி அரசு நியமித்த மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், உயர் அதிகாரிகள் மேற்பார்வையில் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு வழங்கப்பட்ட முன்பணம் மற்றும் பட்டியல்படியான மீதித் தொகையினை நிறுவனங்களின் பெயரில் பெற்று நிறுவனங்களுக்கு நேரடியாக வழங்க இயலாமல் பிரித்து வழங்கவேண்டிய தொகையினை செயல் அலுவலர் கணக்கு வழியாக பெற்று வழங்கப்பட்டது. இதில் முறைகேடுகள் ஏதும் நிகழவில்லை. கஜா புயிலினால் பாதிக்கப்பட்ட பொது மக்களை முகாம்களில் தங்கவைத்து 16.11.2018 முதல் 15.12.2018 வரையில் நாள் ஒன்றுக்கு சுமார் 12500 நபர்களுக்கு 12 முகாம்கள் அமைக்கப்பட்டு, உணவு சமைத்து வழங்கப்பட்டது. வட்டாட்சியர் அலுவலகம் வாயிலாக முன்பணங்கள் ரொக்கமாக பெற்று உணவு சமைக்கப்பட்டு, பின்னர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுரைப்படி செயல் அலுவலரால் கடனுக்கு பொருட்கள் கொள்முதல் செய்து உணவு சமைத்து வழங்கப்பட்டது. தலைஞாயிறு பேரூராட்சி பகுதி மக்கள் கஜா புயல் மற்றும் அதனைத் தொடர்ந்து பெய்த கன மழையினால் உடமைகளை இழந்த நிலையில், அருகிலுள்ள பள்ளிகள், சமுதாயக் கூடங்கள் மற்றும் தற்காலிக தகரஷீட் கொட்டகைகள் அமைத்து தங்க வைத்து உணவு சமைத்து வழங்கப்பட்டமைக்கும், மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டமைக்கும் பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட்டு, தொகை அவரவர் வங்கிக் கணக்கில் வட்டாட்சியரால் நேரடியாக ஈடு செய்யப்பட்டது. முகாம்கள் நடத்தப்பட்ட அனைத்து நாட்களிலும் அமைச்சர் பெருமக்கள், மூத்த இந்திய ஆட்சிப் பணி அலுவலரை மண்டல அலுவலராக நியமித்தும், மாவட்ட ஆட்சித் தலைவரால் குழுக்கள் அமைத்தும் தினசரி பணிகள் கண்காணிப்பு செய்யப்பட்டன.

மேலும், பேரூராட்சிகளின் இயக்குநரின் ஆணைப்படி பல்வேறு மாவட்ட பணியாளர்கள் வருகை தந்து மீட்புப் பணிகளை மேற்கொண்டனர். பேரிடர் மேலாண்மைக் குழு, தீயணைப்பு மீட்புக் குழு ஆகியோர் பணிபுரிந்து வந்த நிலையில் அவர்களுக்கும் உணவு சமைத்து வழங்கப்பட்டது. முகாம்கள் அமைத்து உணவு சமைத்து வழங்கியமைக்கும், முகாம்களில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டமைக்கும் பேரூராட்சி பொது நிதியிலிருந்து செலவுகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை என்றும், உணவு சமைத்து வழங்கியமைக்கு வேதாரண்யம் வட்டாட்சியர் அலுவலகத்தில் பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டதில் உணவு சமைத்து வழங்கியமைக்கு காசாக வழங்கப்பட்ட முன்பணம் போக எஞ்சிய தொகை ரூ.31,03,562/– (ரூபாய் முப்பத்தோறு லட்சத்து மூவாயிரத்து ஐநூற்று அறுபத்திரெண்டு மட்டும்) தலைஞாயிறு பேரூராட்சியில் பணிபுரிந்த செயல் அலுவலர் திரு. ஏ. ரஞ்சித் அவர்களது சேமிப்புக் கணக்கில் வட்டாட்சியரால் வரவுவைக்கப்பட்டது. வரவாக பெற்ற தொகை முழுமையும் கடனாக கொள்முதல் செய்த நிறுவனங்களுக்கு

பட்டுவாடா செய்யப்பட்டுவிட்டது. இதில் முறைகேடுகள் ஏதும் நிகழவில்லை என்று தலைஞாயிறு பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

9. மேற்குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலையில், மனுதாரரது புகார் மனு, தலைஞாயிறு பேரூராட்சி செயல் அலுவலரது விளக்க அறிக்கை, வாக்குமூலம் மற்றும் வாக்குமூலத்துடன் அளிக்கப்பட்ட கூடுதல் விளக்க அறிக்கை ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் கவனமுடன் ஆய்வு செய்யப்பட்டன. மனுதாரர் தனது புகார் மனுவில் தலைஞாயிறு பேரூராட்சியில் கஜா புயல் நிவாரண நிதியில் ரூ.87 லட்சம் முறைகேடுகள் நிகழ்ந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். மனுதாரர் அளித்த 7.7.2021 நாளிட்ட புகார் மனு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மற்றும் ஏனைய அலுவலகங்களுக்கு அளிக்கப்பட்டதன் அடிப்படையில், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தஞ்சாவூர் மண்டலம் அவர்களால் மேற்கண்ட முறைகேடுகள் குறித்து விசாரணை தொடங்கப்பட்டு, தொடர்ந்து நடைபெற்று வருகிறதென்று தலைஞாயிறு பேரூராட்சி செயல் அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. வேதாரண்யம் வட்டாட்சியரால் அளிக்கப்பட்டுள்ள சான்றில் 2018 கஜா புயலின்போது தலைஞாயிறு பேரூராட்சியில் பாதிக்கப்பட்டு முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருந்த மக்களுக்கு உணவு சமைத்து வழங்கப்பட்டமைக்கான நிலுவைத் தொகை ரூ.31,03,562/– கஜா புயலின்போது தலைஞாயிறு பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்துவந்த திரு. ஏ. ரஞ்சித் என்பவரது இந்தியன் வங்கி சேமிப்புக் கணக்கில் (தரங்கம்பாடி கிளை) (கணக்கு எண்.6868123193)ல் வரவு வைக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. முகாம்கள் அமைத்து உணவு சமைத்து வழங்கியமைக்கும், முகாம்களில் அடிப்படை வசதிகள் செய்தமைக்கும் பேரூராட்சி பொது நிதியிலிருந்து செலவுகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை என்று தலைஞாயிறு பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். பேரிடர் காலங்களில் மேற்கொள்ளப்படும் நிவாரணப் பணிகள் அனைத்தும் வருவாய்த் துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருவதால் இதில் பேரூராட்சி பொதுநிதியிலிருந்து செலவுகள் மேற்கொள்ளப்படுவதில்லை. இதில் நடைபெற்றுள்ளதாக கூறப்பட்டுள்ள முறைகேடுகள் குறித்தும், தலைஞாயிறு பேரூராட்சியில் பணிபுரிந்துவந்த செயல் அலுவலர் திரு. ஏ. ரஞ்சித் என்பவரது வங்கிக் கணக்கில் தொகை செலுத்தப்பட்டதன் அடிப்படையிலும், தஞ்சாவூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரால் துறை ரீதியான விசாரணை மேற்கொள்ளப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறதென்று அறியப்படுகிறது. விசாரணை முடிவுற்று, விசாரணை அறிக்கையில் இம்முறைகேடுகள் குறித்து தலைஞாயிறு பேரூராட்சியின் அப்போதைய செயல் அலுவலர் மீது தவறுகள் அல்லது முறைகேடுகள்/விதிமீறல்கள் நடைபெற்றுள்ளது நிரூபிக்கப்பட்டால், சம்மந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் மீது உரிய விதிகளின்கீழ் துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கையினை மேற்கொள்ள பேரூராட்சிகளின் ஆணையாளருக்கு பரிந்துரைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும், இம்முறைமன்ற நடுவத்திற்கு புகார் மனு அளித்துவிட்டு நேரடி விசாரணையில் ஆஜராகாமல் இருந்துள்ள மனுதாரர் திரு. V. ராதா அவர்களை இம்முறைமன்ற நடுவம் மிகவும் கடுமையாக கண்டிக்கிறது. மேலும், இதுபோன்ற புகார்களின் அடிப்படையில், நேரடி விசாரணைக்கு வராமல் தவிர்ப்பதை இனிவரும் காலங்களில் தவிர்த்திடுமாறும் அவரை எச்சரிக்கிறது.

2022ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள் 7–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒம்)/x x x x x
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
திரு. V. ராதா,
த/பெ வரதராஜன், சந்தானம் தெரு, தலைஞாயிறு மற்றும் அஞ்சல்,
நாகப்பட்டினம் மாவட்டம்–714 712
செயல் அலுவலர், தலைஞாயிறு முதல்நிலை பேரூராட்சி, தலைஞாயிறு,
நாகப்பட்டினம் மாவட்டம்–714 712
பேரூராட்சிகளின் மண்டல உதவி இயக்குநர், தஞ்சாவூர் மண்டலம், தஞ்சாவூர்

பேரூராட்சிகளின் ஆணையாளர், பேரூராட்சிகளின் ஆணையரகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி நகர், சென்னை–28

இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028. (பெயரிடப்பட்ட உறையில்)
நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

–/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/–

செயலாளருக்காக